2024 ஜூன் 29]

(ஔ) கர்நாடக அரசு காவிரி நீர் வழங்காததால் குறுவை விவசாயம் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக அரசு தமிழகத்திற்குக் கொடுக்கவேண்டிய நியாயப்பூர்வமான, சட்டப்பூர்வமான தண்ணீரைக் கொடுக்காத காரணத்தினாலே, இந்தாண்டு டெல்டா பகுதியில் குறுவை விவசாயம் இல்லையென்ற நிலை உருவாகியிருக்கிறது குறித்து அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

(ஏ) மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மறுவாழ்வு, சிறப்புக் குழு அமைத்தல்—*தொடர்ச்சி*

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.*

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாஞ்சோலை பிரச்சினை சம்பந்தமாக. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மூன்று பேர் சொன்னதை நீங்களும் வழிமொழிகிறீர்கள்தானே?*

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: *மூன்று பேர் சொன்னதை நானும் சேர்ந்து வழிமொழிகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி.*

(அஅ) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், கிராம ஊராட்சிகளில் தொடர்ந்து பணி வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம ஊராட்சிகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் நான்கு மாதங்களாகப் பணிகள் வழங்கப்படவில்லை. ஆகவே, பணி வழங்க வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்க்கின்றேன்.*